தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042 - வைகாசி 25

2011 ஜூன் 8, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து."

நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.

***[குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி அ. கிருஷ்ணவேணி அவர்கள் 23-2-2011 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திருமதி அ. கிருஷ்ணவேணி அவர்கள், ஆண்டிப்பட்டி தொகுதியிலிருந்து 1962 முதல் 1967 வரையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 8

மறைந்த இவ்வுறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

(அ) இலங்கைப் பகுதிக்குக் காற்றின் வேகத்தால் இழுத்துச் செல்லப்பட்ட மீனவர்களை விடுவித்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1-6-2011 அன்று இராமேஸ்வரம் தங்குதளத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 707 மீன்பிடி விசைப் படகுகளில் இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த டி.என். 10/எம்.எப்.பி./581 என்ற விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 5 மீனவர்கள் மற்றும் டி.என்.12/எம்.எப்.பி./252 என்ற விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்களைத் தவிர, இதர படகுகள் மற்றும் மீனவர்கள் கரை திரும்பிவிட்டனர். இந்த இரண்டு படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்களும், மண்டபம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற இன்னொரு மீன்பிடி விசைப் படகான டி.என்.09/எம்.எப்.பி./153 என்ற விசைப் படகும், அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்களும் கரை திரும்பவில்லை. இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த 2 மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்கள் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த ஒரு மீன்பிடி விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்கள், ஆக மொத்தம் 13 மீனவர்களையும், 3 விசைப் படகுகளையும் கடலோரக் காவல் படை மற்றும் இந்தியக் கப்பற்படைமூலம் கடல் மற்றும் ஆகாய மார்க்கமாகத் தேடிக் கண்டுபிடிக்க 2-6-2011 அன்று எனது அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.*